12. 12.2024

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். 107/2018

அ.சா.12

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கருணாகரன் | | |
| த/பெ | கோவிந்தன் | | |
| கிராமம் | கண்டம்பாக்கம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 37/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் ஆய்வக உதவியாளராக கஞ்சனூர் கிராமத்தில் பணி செய்து வருகிறேன். எனக்கு கண்டம்பாக்கத்தை சேர்ந்த புகார்தாரர் முருகன் மனைவி வீரம்மாளை தெரியாது. இந்த வழக்கில் இறந்துபோன முருகனை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கு குறித்து எனக்கு எந்த விவரமும் தெரியாது. போலீசார் என்னை இந்த வழக்கு தொடர்பாக விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையில் நான் பாண்டிச்சேரியில் தனியார் பள்ளியில் ஆசிரியராக பணி செய்ததாகவும், சத்தியசீலன், சிவக்குமார், அசோக்குமார்,

வினாயகமூர்த்தி, கோபாலகிருஷ்ணன், புகழேந்தி, பிரதாப், அன்பரசு, ராதாகிருஷ்ணன் ஆகியோர் ஊருக்கு வரும்போது அவர்கள் கிரிக்கெட் விளையாட வருவதாகவும், அதனால் எதிரிகள் அனைவரும் எனக்கு பழக்கமானவர்கள் என்றும் , எதிரிகள் கூல்ட் ரிங்ஸ் வாங்கி கொடுத்ததாகவும், எதிரிகள் ரேசன் கடைக்கு முன்பு உட்கார்ந்து முன்பு  சரக்கு அடிப்பார்கள் என்றும், அப்போது ராமதாஸ் துணி பையில் எதையோ சுற்றி ராதாகிருஷ்ணனுக்கு கொடுத்தார் என்றும், அது என்ன ஏது என்று  கேட்ட போது பொருள் என்று சொன்னார்கள் என்றும், அதற்கு ராதாகிருஷ்ணன் சிரித்துக்கொண்டே கத்தி என்று சொல்லி சிலம்பரசனிடம் கொடுத்து மறைத்து வைக்க சொன்னார் என்றும் காவல் துறை விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் நண்பர்கள் என்பதால் உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**மறுவிசாரணை**

**இல்லை**